O.S.No. : 20/2025

Dated: 03.03.2026

**வா.சா.1: அரிசிங் ; த/பெ. நஞ்சா கவுடர்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

13. வா.சா.ஆ.7 ஆவணத்தை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நடப்பதற்கு வழி உள்ளது என்பதை காண்பிப்பதற்காக அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.7 ஆவணம் சிக்கு என்பவருக்குதான் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றும், எனக்கு எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து 3 சென்ட் அளவுள்ள வீட்டு மனை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் கிழ மேல் விடப்பட்டுள்ள வழித்தடத்தில் நடந்துகொள்ள பாத்தியதை உள்ளதாக மட்டும்தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் பச்சை வண்ணம் பூசப்பட்ட வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால், நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 ஆவணத்துடன் வரைபடம் எதுவும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

14. பிரதிவாதி போஜன் என்பவர் வழக்கு சொத்து சர்வே எண்ணில் 4 சென்ட் பூமி கிரையமாக பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தின் குறுக்கே தற்போது சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது வழித்தடத்தில் கட்டப்படவில்லை, தனியாக கட்டப்பட்டுள்ளது. பிரதிவாதி போஜன் கிரையம் பெற்ற பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வழித்தடம் தற்போது இல்லை என்றால் சரியல்ல, தற்போதும் அந்த வழித்தடம் உள்ளது. பிரதிவாதி கிரையம் பெற்ற பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தின் குறுக்கே சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சமுதாயக்கூடம் 2002 ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி போஜன் என்பவருக்கு தற்போது பத்திரத்தில் கூறப்பட்ட வழித்தடம் இல்லாததால்

பிரதாண சாலையிலிருந்து உச்சன் குடும்பத்தாருக்கும், A.T. சிக்கு குடும்பத்தாருக்கும் R.S. No. 271/14-ல் உள்ள 2 அடி அகலமுள்ள தடத்தில்தான் பிரதிவாதி தற்போது நடந்து வருகிறார் என்றால் சரிதான், நாங்களும் அந்த வழியாகத்தான் நடந்து வருகிறோம்.

15. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் நாங்களும் அந்த 2 அடி அகலமுள்ள தடத்தின் வழியாகத்தான் நடந்து வருகிறோம் என்பது பற்றி கூறவில்லை என்றால் அது பற்றி வழக்கறிஞருக்குத்தான் தெரியும், நாங்களும் அந்த வழியாகத்தான் நடந்து வருகிறோம், ஆனால் பிரதிவாதி போஜன் அதை தடுத்து வருகிறார். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் நாங்கள் அந்த 2 அடி அகலமுள்ள தடத்தின் வழியாக நடந்து வருவதை பிரதிவாதி போஜன் தடுத்ததாக கூறப்படவில்லை என்றால் சரியல்ல, கூறப்பட்டுள்ளது. எனது தோட்டம் மற்றும் வீட்டிற்கு செல்வதற்கு 15 அடி அகல தடம் உள்ளதா என்றால் சமுதாயக்கூடம் வரை உள்ளது. சமுதாயக்கூடத்திலிருந்து எனது தோட்டம் சுமார் 500 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, சமுதாயக்கூடத்திலிருந்து எனது தோட்டம் சுமார் 20 மீட்டர் தொலைவில்தான் அமைந்துள்ளது. நான் அவ்வாறு சமுதாயக்கூடத்திலிருந்து 20 மீட்டர் தொலைவில் எனது வீடு அமைந்துள்ளதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல, உண்மைதான்.

16. நான் கூறுவதுபோல சமுதாயக்கூடம்வரை 15 அடி அகல பாதை உள்ளது என்பது தவறு என்றால் சரியல்ல, சமுதாயக்கூடத்திலிருந்து உச்சன் என்பவர் இடம்வரை 15 அடி அகல தடம் உள்ளது. சமுதாயக்கூடம் பிரதான சாலையை ஒட்டித்தான் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறுவதுபோல சமுதாயக்கூடத்திலிருந்து உச்சன் என்பவரது இடம் வரை 15 பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல, பாதை உள்ளது. பிரதான

சாலையிலிருந்து தாவா "A Schedule" சொத்து வரை 15 அகல அடி தடம் உள்ளது என்பதை காண்பிக்க நான் எந்தவித வரைபடமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தோட்டமான வழக்கு "A Schedule" சொத்திலிருந்து எனது வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 120 மீட்டர் தொலைவில் உள்ளது.

17. நான் தாவா அ அட்டவணை சொத்தை கிரையம் பெற்றதிலிருந்து 35 வருடங்களாக எனது சகோதரர் அர்ஜுனன் என்பவரது தோட்டத்தின் வழியாகவும், பாபு என்பவரது வீட்டிற்கு முன்னால் உள்ள பாதை வழியாகத்தான் விளைச்சல்களை எடுத்துச்சென்று வந்தேன் என்றால் அந்த பக்கமாக செல்வதற்கு எனக்கு வழியில்லை, அர்ஜுனன் பூமிக்கும், எனது பூமிக்கும் 20 அடி உயரம் உள்ளது, அந்த வழியாக நான் இதுவரை சென்றதில்லை, தற்போதும் செல்ல இயலாது. A.S. மணி மற்றும் A.H. நஞ்சன் ஆகியோரது பூமி எனது பூமியை ஒட்டித்தான் அமைந்துள்ளது என்றால் சரிதான். A.S. மணி மற்றும் A.H. நஞ்சன் ஆகியோரது பூமி வழியாக எனக்கு பாதை உள்ளது என்றால் அது மணி என்பவரது தனிப்பட்ட பூமியாகும், அதில் அவர் எப்போது வேண்டுமானாலும் வீடு கட்டலாம், தற்போது காலியாகத்தான் உள்ளது, அதனால் அந்த வழியாக நான் சென்று வருகிறேன்.

18. பிரதான சாலையிலிருந்து எனது பூமிக்கு செல்ல வேண்டும் என்றால் மேடு ஏறிதான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். பழைய சர்வே எண் 87/6A1 எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சுமார் 20 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. எந்தக்காலத்திலும் எனது பூமிக்கு 15 அடி அகல தடம் இருந்ததில்லை என்றால் சரியல்ல, இருக்கிறது. அவ்வாறு 15 அடி தடம் இல்லாததால்தான் நான் அதை காண்பிக்க வரைபடம் உள்ளிட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனது சொந்த தடம் அல்ல, பொது தடம் என்பதால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. 16.03.2013 அன்று

புதுமந்து காவல் நிலையத்தில் பிரதிவாதி 15 அடி வழியை அடைத்துவிட்டதாக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகார் பொய் புகார் என்பதால்தான் காவல் துறையினர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, ஊரில் உள்ள பெரியோர்களிடம் பேசி சமாதானம் செய்துவிடலாம் என்பதால்தான் நான் புகாரை வாபஸ் பெற்றுக்கொண்டேன். அவ்வாறு சமாதானம் செய்து கொள்ளலாம் என்று புகாரினை வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்பதை எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை.

19. நான் வழக்குரையில் கூறியுள்ளது போல 14.09.2024 தேதியில் பிரதிவாதி வழித்தடத்தை மறைத்து சுவர் கட்டுவதற்காக குழி தோண்ட முயற்சி செய்தார் என்பது உண்மையல்ல என்றால் சரியல்ல, உண்மைதான், அதை நான் ஆட்சேபனை செய்தேன். நான் ஆட்சேபனை செய்ததாக சொல்வதும், 17.09.2024 தேதியில் புதுமந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்வதும் உண்மைல்ல என்றால் சரியல்ல, நான் புகார் கொடுத்தேன், ஆனால் காவல் துறையினர் உரிமையியல் பிரச்சனை என்பதால் புகாரை ஏற்றுக்கொள்ளவில்லை. எனக்கும், பிரதிவாதிக்கும் என்ன உறவு என்றால் எனக்கும், பிரதிவாதிக்கும் 30 வருடங்களாக எந்தவிதமான தொடர்பும் இல்லை. எனது தகப்பனாரும், பிரதிவாதியின் மாமனாரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

20. எனது தகப்பனாருக்கும், பிரதிவாதியின் மாமனாருக்கும் இடையே கடந்த 40 வருடங்களாக பூமி பிரச்சனை தொடர்பாக பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனக்கு 15 அடி வழி கிடையாது என்றும், எனக்கும், பிரதிவாதிக்கும் உள்ள முன் பகை காரணமாக பிரதிவாதியை தொந்தரவு செய்வதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காகவே 17.09.2024-ல் பொய்யாக ஒரு புகாரினை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 16.03.2013 அன்று புதுமந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பிறகு இதுவரை இந்த வழக்கு தவிர நான் வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு 15 அடி அகல தடத்தில் வழி உரிமை உள்ளது என்று இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் எதுவும் இந்த வழக்கில் நான் கோரவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எனக்கு உரிமை இருந்திருந்தால் 16.03.2013 தேதியிலிருந்து 3 வருடங்களுக்குள் நான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், எனவே இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் எதுவும் இல்லை எனவும் சொன்னால் சரியல்ல, நான் 16.03.2013 தேதியில் கொடுத்த புகார் வேறு பிரச்சனை தொடர்பானதாகும். நான் பொய்யான வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

Loganathan Prakash

Digitally signed by Loganathan Prakash
Date: 2026.03.03 15:22:47 +0530